100

பதிவு எண்—M. 5720 வெள்ளிக் கிழமையில குருகுலத் தாள்

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை—4 குருதலம், மாம்பாக்கம்; கர, கார்த்திகை; 7—12—51 தளிர்—10

9 - JAN 952
MADRAS

## குருகுலத்தின் குறிக்கோள் :

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

## தலையின் பயன்

மனிதப் பிறப்பு, சிறந்தது என்று புகழ் பெறுகிறது. காரணம், மற்றப் பிறப்புக்களுக்கு இல்லாத ஏதோ சிறப்பு நலம் மனித உடலில் இருக்கவேண்டும். அது, உள்ளுணர்வு நலம் என்பது தெளிவு. ஆகவே, அந் நலத்துக்குரிய மனம் முதலிய அகக் கருவிகள் மனித உடலில் சிறப்பாகப் பொருந்தியிருக்க வேண்டும்.

உயிர்களுக்கு நிகழும் உணர்வு உள்ளிருந்து எழுகிறது. அதன் வளர்ச்சிக்கு, மெய் வாய் முதலிய புறக் கருவிகள் வெளிப் பொருள்களைப் பற்றி ஓரளவு வாயிலாயிருக்கின்றன; ஆனால் மனம் முதலிய அகக்கருவிகள் உள் மடங்கி உட்பொருளாகிய இறைவனைப் பற்றி அவ் வளர்ச்சிக்குப் பேரளவில் உதவியாயிருக்கின்றன. புறக்கருவி நிலை, விலங்கு முதலிய எல்லாப் பிறப்புகளுக்கும் பொது. அக்கருவி நிலை, மனிதப் பிறப்புக்கே சிறப்பு.

தலையில், புறப் பொறிகளும் உள்ளன வென்றாலும், அதனை அகக் கருவிகளின் பெட்டகம் என்றே உலகம் கருதி வருகின்றது. ஏனென்றால், தலை என்று சொன்னதும், மூளை முதலிய அகக் கருவிகள் நினைவுக்கு வருகின்றன. ஆதலால், தலையின் செயல், அகக் கருவிகளை உள்ளுணர்வின் மாட்சிக்குப் பயன் கொள்ளுதலாகும். அது தியானித்தல்.

பார்த்தல் கேட்டல் முதலிய தத்தம் தொழில்களைக் கொள்ளாத கண் காது முதலியன எப்படி வீணோ, அப்படியே தியானித்தலைச் செய்யாத அகக் கருவிகளின் நிலையமாகிய தலையும் வீண்.

"கோளில் பொறியின்
குணம் இலவே
எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை"

கோள் இல்—கொள்ளுதல் இல்லாத, பொறியின்—மெய் வாய் முதலிய ஐம் பொறிகளைப் போல, எண் குணத்தான் தாளை வணங்காத் தலை—எண்ணத்தக்க குண நலமுடைய இறைவன்றன் திருவடிகளைத் தொழாத தலைகள், குணம் இல—பயனில்லாதன.

குருட்டுக் கண், செவிட்டுக் காது முதலியன போன்றது, இறைவனை வணங்காத தலை என்பது கருத்து.

மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் ஐந்து பொறிகளும் தலையில் உள்ளன; இருந்தும் தலையை வேறாகக் கூறியிருத்தலின், பொறிகளுக்கு வேறான மனம் முதலிய அகக் கருவிகளின் இடமாகத் தலை விளங்குகின்றது என்பதும், இறைவன் திருவடிகளை வணங்காதபோது அக் கருவிகளும் பயன் கொள்ளாமல் வீண்படுகின்றன என்பதும் பெறப்படும்.

தலை பெற்ற பயன் தேனிப்பு (தியானம்) எனத் தெளிவிப்பதற்கு, எண்ணத் தக்க (தியானிக்கத் தக்க) குணநலமுடையவன் என்று இறைவனை ஆசிரியர் விளக்கிக்கொண்டார்.

## "முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

**4-ம் ஆண்டுக் கையொப்பம்**
**(5-10-51 முதல்)**

| | | | | |
|---|---|---|---|---|
| உள் நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | | 0 | 1 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன்பணத்துடன் எழுதுக.

முகவரி :—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)


"யாதும் ஊரே, யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.


| கொடி | கர, கார்த்திகை, | தளிர் |
|---|---|---|
| 4 | 7-12-51 வெள்ளி | 10 |


## குண நலம்

இந்த இருபதாம் நூற்றாண்டு, உலகப் பெரும் போர்கள் கண்ட நூற்றாண்டு. போர் வெறி கொண்டு, அன்பை இழந்து, தெய்வத்தை மறந்து, துன்பத்தில் ஆழ்ந்து, வெறும் வெளிப்பகட்டிலும் வாய் வேதாந்தத்திலும் போலிச் சமய மத மார்க்கங்களிலும் மயக்குண்டு சீர்கேடுற்று உலகம் அவதிப்படும் நூற்றாண்டு.

மக்களிடையே அறியாமை வறுமை பிணி முதலியன தாண்டவமாடிக்கொண்டிருக்கின்றன. அறியாமை நீங்கிக் குணத்தோடு கூடிய அறிவு வளர்ந்தால், ஏனை வறுமை பிணி முதலியனவும் ஒழியும்.

விஞ்ஞானம் நாளுக்கு நாள் எல்லையில்லாத அளவில் வளர்ந்து கொண்டு போகின்றது. இவ் வளர்ச்சியினால் மக்களிடையே அறியாமையோ தீச் செயலோ குறையக் காணோம்.

வெறும் அறிவு வளர்ந்து விட்டால்மட்டும் போதாது; அறிவுடன் குணமும் வளர வேண்டும் என்று 'அறிவுநூல்' கூறுகிறது.

அறிவு வளரவேண்டுமானால் யாவரும் கல்வியில் தேர்ச்சி பெறவேண்டும்; குணம் பெருக வேண்டுமானால் யாவருக்கும் கடவுளன்பு மிக வேண்டும்.

நம் முன்னோர், கடவுள் வழிபாட்டினால் தூய குணநெறியில் வாழும் வகைபெற்று அழியாப் புகழும் நலமும் பெற்றுள்ளார்கள்; அறுபத்து மூன்று நாயன்மார் வரலாறுகள், ஔவையார் இளங்கோவடிகள் முதலிய பேராசிரியர் வரலாறுகள் போல்வன இதற்குச் சான்று.

குணம் என்பது, உண்மை, கருணை, பெருந்தன்மை, கடமை, வீரம், அமைதி முதலியன அமைந்த பண்பாடு! இவற்றிற்குத் தக்கபடி, நம் முன்னோர், கடவுள் வடிவுகள் கண்டு வழிபட்டுக் குணநலத்தில் மிகுந்து வந்தனர்.

சிவம்: இது உண்மையின் வடிவு; உள்ளது என்பது இதன் கருத்து. சிவத்தைச் 'சத்' என்பர் பெரியோர். 'சத்' என்பதற்கு 'உள்ளது' என்பது பொருள். 'சிவ சத்' என்றுங் கூறுவதுண்டு. அழியாத நிலை மாறாத உண்மை நெறியில் மக்கள் தவறாமல் இருக்கச் செம்பொருட் சோதியாகிய சிவத்தின் [illegible] உதவும்.

உமை: இவ்வம்மை, கருணையின் வடிவு; தாய்மார் கருணை வடிவினர். உமை யம்மையை 'அருள்' என்றும் 'திருவருள்' என்றும் கூறும் வழக்கினாலும் இதனை அறியலாம்.

பிள்ளையார்: இவர், யானை முகக் கடவுள்; இவ்வடிவு பெருந்தன்மை என்ற பண்பை உணர்த்துகின்றது. யானை, கம்பீரம் வாய்ந்த தென்பதை யாவரும் அறிவர். அதற்கேற்ற நடையும் நோக்கும் அது உடையது. பெருந்தன்மை நோக்குடன் யானைமுகக் கடவுளை வழிபட வேண்டும்.

முருகன்: இவ்வடிவம், சிறந்த இளமை நிலையை உணர்த்தும். இளமைப் பருவம், கடமைகளை நன்கு நிறைவேற்றும் பருவம். 'கடமைக்குப் பின் கடவுள்' என்ற வாக்குக்கிணங்கக், கடமையுணர்ச்சி, வாழ்க்கையில் மேலிட வேண்டும். அது தகுந்த முறையிலே முடிவதற்கு, 'முருக தியானம்' பெரிதும் உதவும். முருகன், கடமைத் தெய்வம்.

வீரபத்திரர்: இவர், வீரத்துக்கு வடிவு. உண்மை இரக்கம் பெருந்தன்மை கடமை யுடையோர்க்கு அவற்றின்பின் வீரம் இயல்பாகவே தோன்றுகின்றது. அஞ்சத் தகாதவற்றிற்கு அஞ்சாமை வீரம்! வீரபத்திரரின்

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)


Telegrams: "RAMBROS"

**N. Ramu Bros;**

GENERAL HARDWARE
MERCHANTS

AVANASHI ROAD,
**COIMBATORE.**

# "நான் பெற்ற * * * * இன்பம்......"

(பா. வரதராஜன்)

வரலாறு காலம் என்ற தத்துவத்துடன் இயைபுண்டு காலத்துக்குட்பட்டு நிற்பது.

வரலாற்றுப் படிப்பினை யாது? அது வெறும் நிகழ்ச்சிகள் மட்டுமன்று காலம் என்ற தத்துவத்தினூடே, உயிர்கள் எங்ஙனம் வளர்ச்சியுற்று வந்திருக்கின்றன வென்பதை உள்ளங்கை நெல்லிக்கனி யெனத் தெரிவிப்பது. மனிதனின் அறிவு, மன வளர்ச்சிகளை அளந்தறிய வரலாற்றினும் மேலான ஓர் அளவு கோலைக் காணமுடியாதன்றோ?

சிந்து மாகாணத்தில் கண்டு பிடிக்கப்பட்ட மொகஞ்சதாரோவினும், மேற்குப் பஞ்சாப் மாகாணத்தில் அகழ்ந்தெடுக்கப்பட்ட ஹரப்பாவினும் என்ன தெளிகின்றோம்? இவ்வழிவுகளை, சிதைவுகளை, ஆராய்ந்த அறிஞர்கள் அவை "ஒரு உன்னத நிலைக்கு வளர்ந்த நாகரிகத்தின் பயன் என்றும், அந்நாகரிகம், இந்நிலையை அடைய ஆயிரக் கணக்கான ஆண்டுகள் கழிந்திருக்க வேண்டு" மென்றும், வியந்துள்ளார்கள். [இந்நாகரிகம் இந்தியாவுக்கு ஆரியர்கள் வருகைக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன் நிலவி இருந்தது. அது தென்னிந்தியர்களின் நாகரிகத்தோடொத்த தென்பது ஆராய்ச்சி முடிவு].

மோகஞ்சதாரோ, ஹரப்பா போன்ற சிதைவுகளின் உண்மையில் அவற்றின் நாகரிகம், பல ஆயிரம் ஆண்டுகளின் கழிவில் மனிதன் பெற்ற அறிவும், அனுபவமும் சேர்ந்ததொன்று என்பது வெளிப்படை.

இங்கேதான் நாம் தப்பாது அறியக் கிடக்கும் உண்மை இருக்கின்றது.

எண்ணிப்பார்ப்போம்! எப்பொருளையும் தன் செலவில் மாற்றியும் அழித்தும் செல்லும் வன்மை படைத்த காலத்தாலும் அழிக்கப்படாது இன்னும் புதுமையுடன் இலங்கும் நம் பண்டைய தமிழ் இலக்கண இலக்கியங்கள் தோன்றுதற்கு அடிப்படையாக இருந்த உள்ளமும் அறிவும் இவ்வண்ணமே, பலகாலும் வளர்ச்சியுற்றுப் பண்பட்டதாக இருந்திருக்க வேண்டுமென்பதற்கு அந்நூல்களே சான்றாகும்.

எனவே, நம் பண்டைய நூல்கள் எல்லாவற்றினும் மிகச் சிறந்ததாக இலங்கும் நம் தமிழ் மறையின் கூற்று பொய்யென்றோ அன்றிப் பொருந்தாதன வென்றோ எக்காலும் கொள்ள முடியாது.

இன்றைய விஞ்ஞானம் முன்னேறிய வரலாற்றையும் எண்ணிப் பார்ப்போம். அத்துறையில் ஈடுபட்டோர் பலகாலும் தங்கள் அறிவு, மனம், அனுபவங்களை அத்துறையில் முழுக்க முழுக்கச் செலுத்தி அவ்வாராய்ச்சியிலேயே தங்கள் மனம் ஒன்ற ஒன்றப் பொருள்களின் நுண்ணியல்புகளைப் பலரும் வியக்க வெளியிட்டுள்ளார்கள். இது மனத்தின் இயல்பு. எதன் ஒன்றில் மனம் ஆழ்ந்து ஒன்றிச் செயல் படுகின்றதோ அதைப் பற்றிய உண்மைகள் வெளிப்படையாகக் காணப்படுவதைக் காட்டிலும், அதிகமாகத் தெளிந்து அதில் ஒரு தனிப்பட்ட சக்தியைப் பெறுகின்றது.

எனவே கலைகளில் ஒன்றித் தெளிந்த மனம் கலைஞனென வும், கற்பனையும் புதுமையும் விழைந்தமனம் கவிஞனெனவும், பருப் பொருளாராய்ச்சியில் தோய்ந்து பொருளறிவு பெற்ற மனம் விஞ்ஞானியெனவும் பெயர் கொள்ளுகின்றது. இங்ஙனமே, எல்லாவற்றினும் மேலான ஒரு பரம்பொருளை, உண்மைப் பொருளை, இன்பப் பொருளை அகத்தே பலகாலும் எண்ணும் மனம் மெய்ஞ்ஞானியாகின்றது.

இங்கு நாம் மனத்தின் இயல்பையும் சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளோம். அது மனிதனுக்குச் சிறப்பாக, அகத்தே அமைந்த ஓர் அரிய கருவி; நுண்ணிய கருவி, சூக்குமக்கருவி; அதன் சக்திகள் எண்ணில! இவ்வரிய நுண்ணிய சூக்குமக் கருவியை, அகத்தே பொருந்திய கருவியை, அரியதும் நுண்ணியதும் சூக்குமமானதும் அகத்தேயே தெளியத்தக்கதுமான, ஒரு மேலான பொருளின் சிந்தனையில் ஈடுபடுத்தி ஒன்ற வைக்க வேண்டுவதுதான் மனம் படைத்த ஒவ்வொரு மாந்தரின் இயல்பான செயலாகும்.

இங்கேதான் மனிதப் பிறப்பின் மேன்மையும், அருமையும் தெளியக் கிடக்கின்றன.

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

# சிலப்பதிகாரம்

## 9. ஒரு நாள் மாலை

(முத்துசாமி)

கோவலன் 'வடுநீங்கு சிறப்பின் தன் மனையகம்' மறந்து மாதவியோடு கூடிக் களிமகிழ் வெய்தியிருந்தனன். அதனால் அவனுக்கு என்றும் நீங்கா வடு (குற்றம்) உண்டாயதையும் உணர்ந்தானில்லை.

மற்றொருபால் கண்ணகி கணவனைப் பிரிந்து வாடியிருந்தனள். மாதவி கலவியும் புலவியும் காதலர்க்களித்து களிமகிழ் வெய்தியிருந்தது போலவே அந்நகரில் காதலரொடு கூடியிருந்த மகளிரும் இன்புற்றிருந்தனர். மற்றொருபால் கண்ணகி கணவனைப் பிரிந்து வாடியிருந்தது போலக் காதலரைப் பிரிந்த மகளிர் ஊதுகின்ற துருத்தியின் மூக்குப் போல அழலெழ உயிர்த்தனராய் வாடியிருந்தனர். கூடியிருந்தார் கலவியிலும் புலவியிலும் இரவைக் கழித்ததாலும், வாடியிருந்தார் துயில் பெறாது கண்ணீர் உகுத்து இரவைக் கழித்ததாலும், காமன் கருப்பு வில் வேந்தி இரவு முழுதும் திரிந்ததாலும் நகரம் காவல் நனி சிறந்தது.

மாலைநேரம் காமக்குறிப்பு மிகும் நேரம். தென்றற் காற்றை நுகர்ந்தும் ஆயர் குழலோசை கேட்டும், மாவும் புள்ளும் துணையோடு மருவி விளையாடக் கண்டும் காதலர்கள் காமக் குறிப்பு மிக்கு விளங்குவர். காதலரைப் பிரிந்தவர்கள் பொதுவாக எப்பொழுதுமே ஆற்றாது வாடியிருப்பரெனினும் மாலை நேரத்தில் ஆற்றாமை மிக்குச் சொல்லொணாத் துயருறுவர். "காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி மாலை மலருமிந் நோய்" என்ற திருக்குறளும் இதனை வலியுறுத்தும்.

அத்தன்மைத்தாய ஒரு நாள் மாலை வந்தெய்தியது.

கடலை ஆடையாகவுடைய நில மடந்தை, கதிரவனாகிய தன் கணவனைப் பிரிந்து, திசைகளாகிய முகம் பசந்து, மலர்களாகிய கண்களில் தேனாகிய நீரைச் சொரிந்து வாடியிருந்தனள்.

சூரியன் அப்பொழுதுதான் மறைந்த நேரம். இன்னும் திங்கள் தோன்றவில்லை. அவ்வாறு நிலமடந்தை வாடியிருக்க வந்தது மாலை நேரம் என்று தொடக்கத்திலேயே கூறியிருப்பது கொண்டு, உலகம் கண்ணகியின் துயரைப் பற்றியே நினைந்து ஆற்றாதாயிற்று என்பதும், மாதவியின் மகிழ்ச்சி குறித்து இன்புறவில்லை யென்பதும் பெற்றாம். கண்ணகிக்கும் அவள் போன்றாருக்கும், தங்களைப் போலவே நில மடந்தையும் ஆற்றாது வாடியிருந்ததாகத் தோற்றமளித்தது; அம் மாலை நேரத்தில்.

அம் மாலை நேரத்தில், ஒருபால் புனிற்றிளங் கன்றுகளைக் காண ஆவலோடு திரும்பிவரும் ஆனினங்களை ஓட்டி வரும் ஆயர்கள் குழல் ஊதி இன்னிசை எழுப்பினர். மற்றொருபால் வண்டுகள் முல்லைப் பூவைச் சுற்றி ஊதி ஒரு வகையான இசையை எழுப்பிக்கொண்டிருந்தன. தென்றலஞ் செல்வன் மலர் மணத்தை எங்கும் பரப்பினன். வீடுகளில் ஒலி வளை மகளிர் திருவிளக்கேற்றினர்.

இவ்வித மாலை நேரக் காட்சியை இன்றும் நம் நாட்டில் கிராமங்களில் காணலாம். நெல் காய்க்கும் மரம் எப்படியிருக்கும் என்று கேட்கும் பட்டணத்தானுக்கு இத்தகைய எழில்மிக்க காட்சி எப்படித் தெரியும்?

அந்தி நேரத்தில் இளம் பெண்கள் திருவிளக்கேற்றி வழிபாடாற்றுவது வழக்கம். குருகுல ஆசிரியர் இளவழகனார் அவர்களும் அந்தி வேளையில் மாதர்கள் திருவிளக்கேற்றி வழிபாடாற்றுதலின் சிறப்பைத் தம் 'ஒளி வழிபாடு' என்ற நூலில் கூறியிருப்பது காண்க.

அம் மாலைப் பொழுது சற்றே கழியப், பாண்டியர்களின் குல முதலாகிய வெண்பிறை அந்தி வானத்தில் தோன்றியது. அப் புன்கண் மாலையை ஓட்டிப் பாலொளி பரப்பி மீனிராச்சியத்தை ஆண்டுகொண்டிருந்தது.

நிலவுப்பயன் கொள்ளும் நெடு நிலா முற்றத்தில் இல்வளர் முல்லை முதலிய பல் பூஞ் சேக்கைப் பள்ளியில் அமர்ந்து மாதவி கலவியும் புலவியும் கோவலனுக் களித்துக் கூடிப் பொங்கினள். அப்பொழுது குலைந்த ஒப்பனையைப் பின்னரும் திருத்திக் கொண்டனள். அவ்வாறு மகிழ்வெய்தியிருந்தாள் மாதவி.

நிலவொளியை நுகரவென்றே நிலா முற்றம் அமைத்திருந்தனர் அக்கால மக்கள். கலவியிலும், புலவியிலும், முயங்குதலிலும் கலைந்த ஒப்பனையைத் திருத்திக் கொண்டனள் என்பது தோன்ற,

‘கோலங்கொண்ட மாதவி’ என்றார். விதவிதமாகப் பின்னும் பின்னும் ஒப்பனை செய்து கொண்டாள் என்னும் பொருளில் அவ்வாறு கூறினார் எனினும் அமையும். (ஒப்பனை-அலங்காரம்)

மாதவியைப் போலவே காதலரைக் கூடியிருந்த பெண்கள் நறும் புகைப் பண்டங்களாகிய அகில் அயிர் முதலியவைகளைத் துறந்து இமய மலையிலிருந்து எடுத்த கல்லில் பொதிகைமலைச் சந்தனக் கட்டையைத் தேய்த்து அதனாலாகிய சந்தனத்தைப் பூசிக் கொண்டனர்.

கூடுங் காலத்துத் தட்பப் பொருள் விரும்புதல் இயல்பாதலின் புகைக்குரிய பண்டங்களைத் துறந்து சந்தனத்தைக் கொண்டனர். புகைப்பண்டங்களைக் “குடதிசை மருங்கின் வெள்ளயிர் தன்னொடு குணதிசை மருங்கின் காரகில்” என்றும், சந்தனத்தை “வடமலைப் பிறந்த வான்கேழ் வட்டத்துத் தென்மலைப் பிறந்த சந்தனம்” என்றும் கூறியிருத்தலை நோக்கும் போது அந்நகரில் நாற்றிசைப் பொருளும் வந்து மலிந்து கிடந்தமை புலனாம். பிற நாட்டுடன் நடாத்திய வாணிபத்தின் சிறப்பும் இதனால் அறியலாம்.

அங்ஙனம் புகைப் பண்டங்களைத் துறந்து சந்தனத்தைப் பூசிக்கொண்ட மகளிர் பல் பூஞ் சேக்கைப் பள்ளியில் இளந் தென்றலால் மயங்கி தம் ஆவியன்ன கொழுநர் ஆகத்துப் பொருந்திக் களிதுயிலெய்தினர்.

பூம்புகாரில் அந் நேரத்தில் மாதவியும் அவளைப்போலக் காதலரொடு கூடியிருந்த மகளிரும் அங்ஙனம் மகிழ்ச்சியுடனிருக்க, கண்ணகி சோகமே உருவாயிருந்தமையை ஆசிரியர் படமெழுதிக் காட்டியதுபோலக் கூறியிருக்கின்றனர்.

“அஞ்செஞ் சீரடி யணிசிலம் பொழிய,
மென் துகில் அல்குல் மேகலை நீங்கக்,
கொங்கை முன்றில் குங்கும
மெழுதாள்,
மங்கல வணியிற் பிறிதணி மகிழாள்,
கொடுங்குழை துறந்து வடிந்துவீழ்
காதினள்,
திங்கள் வாள்முகம் சிறுவியர் பிரியச்,
செங்கயல் நெடுங்கண் அஞ்சனம்
மறப்ப,
பவள வாணுதல் திலகம் இழப்பத்,
தவள வாள்நகை கோவலன் இழப்ப,
மையிருங் கூந்தல் நெய்யணி மறப்ப,
கையறு நெஞ்சத்துக் கண்ணகி......”

கையற்ற நெஞ்சத்தையுடையவளாய்க் கண்ணகியிருந்தனள். சிலம்பு மேகலை முதலிய அணிகள் அணிந்துகொள்ளவில்லை; கொங்கை முன்றிற் குங்குமம் எழுதிக் கொள்ள வில்லை; காதில் குழையும் அணியவில்லை; மதிபோலும் நெற்றியில் சிறு வியர்வு இல்லை (இது கூடுங்காலத்து ஏற்படுவது). கண்களுக்கு மை தீட்டிக் கொள்ளவில்லை; கூந்தலுக்கு நெய்ப் பூச்சுப் பூசிக் கொள்ளவில்லை.

அவ்வாறு எவ்விதமான ஒப்பனையுமின்றி, சோக உருவாய் இருந்தனள். பிரிந்த அவள் அவ்வாறு இருந்தனள் எனவே கணவனொடு வாழ்வார் அவ்வளவு ஒப்பனையும் செய்து கொண்டனர் என்பது பெறப்படும். ஆகவே பெண்கள் ஒப்பனை செய்துகொள்வதெல்லாம் கணவனுக்காகவேயன்றித் தங்களுக்காக அல்ல என்பது தெரிகிறது. அங்ஙனமிருக்கக் கணவன் விரும்பாதிருக்கவும் பெண்கள் அணிகலன்களை வற்புறுத்தி வாங்கித் தரச் சொல்லி அணிந்துகொள்ளுதல் தமிழ் நாட்டுப் பெண்களுக்கழகன்று. கண்ணகியின் வழியில் வந்த பத்தினிப் பெண்கள் என்று தங்களைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுபவர்கள், அவள் குணங்களையும் கடைப்பிடித்தொழுகல் வேண்டும்.

மங்கல அணியென்பது ‘திருமாங்கல்யம்’ (தாலி). கற்புடை மகளிரின் அவ்வணி பிறர் பார்க்கவும் பேசவும் படாததொன்றானமையின் வேறு வாய்பாட்

நஞ்சன்கூடு பல்பொடி.

பாக்டெரியாரின்




யுனைடெட் கன்ஸர்ன்,

54, பந்தர் தெரு, :: சென்னை-1.

டால் மங்கல அணியென்று கூறினர். உடல் முழுவதற்கு மாய இயற்கையழகு என்று பொருள் கொண்டு தாலி கட்டும் பழக்கம் அக்காலத்தில் இல்லை யெனக் கூறுவது பொருந்தாது. மங்கல அணி யென்று 'திருமாங் கல்யத்தைத்' தான் குறித்தார் என்பது இன்னும் ஒரு காரணத் தாலும் உறுதிப்படும். பெரி யோர்களைக் கூறும்போது அடி முதல் முடியீறுகக் கூறுவர். அவ்விதமாக ஈண்டும் அடி முதல் கூந்தல் ஈறுக வரிசை யாகக் கூறுகையில் "கொங்கை முன்றில் குங்குமம் எழுதாள்" என்று கூறிய பின்னர் மங்கல அணியைக் குறிப்பிட்ட படியால் அவ்வணி கொங்கையுறுப்புக்கு மேற்பட்ட உறுப்பிற்குரிய அணியென்பது பெறப்படும். 'திருமாங்கல்யம்' கழுத்தி லிருந்து இதயம் வரை தாழ்ந் திருக்கும்படியாகத் தொங்கும் படி அணிந்துகொள்வ தாத லின் அதனையே குறிப்பிட்டார் என்பது பெறப்படும். அதற்கு அடுத்தபடியாக உயர்ந்த உறுப் பாகிய காதின் குழையைக் குறிப்பிட்டிருப்பதும் காண்க. இனிக் கணவனைப் பிரிந்த மகளிர் உறுப்பு நலனெல்லாம் அழிந்து அழகில்லாது இருப்பர் என்று 'உறுப்பு நலனழிதல்' என்னும் பகுதியில் ஆசிரியர் திரு வள்ளுவர் கூறியிருத்தலால் கண் ணகி இயற்கையழகையன்றி வேறு அழகை மகிழவில்லை என்று பொருள் கொள்ளுதல் பொருந்தாதாம். அவள் இயற்கையழகும் குறைந்தே இருந்தனள்.

கண்ணகி எவ்வாறு அணி களைத் துறந்தும் ஒப்பனை செய்து கொள்ளாமலும் வாடி யிருந்தனளோ அவ்வாறே அந் நகரில் கணவனைப் பிரிந்த மகளி ரும் ஊதுலை மூக்குப் போல உயிர்த்தும், இளவேனிற் காலத் திற்கமைந்த பள்ளிக்குச் செல் லாது கூதிர்காலத்திற்கான பள் ளியில் சாளரக் கண்களை அடைத்து விட்டு, சந்தனம் பூசிக் கொள்ளாமலும், முத்தா ரம் அணிந்து கொள்ளாமலும், இணையணையில் துயில் பெறுதும் கண்ணீர் உகுத்து வாடி யிருந்தனர்.

அந்திமாலைச் சிறப்புச் செய் காதை என்னும் பகுதியில் ஆசிரியர் இளங்கோவடிகள் அந் நகரத்தில் ஒருபால் கூடினர் மகிழ்வெய்தியிருந்ததையும் மற்றொருபால் கூடாதார் துய ருற்றிருந்ததையும் நயம்பட எடுத்துக் காட்டியிருப்பது மிக வும் பாராட்டற்குரியது.

அக்காதையின் இறுதியில் ஓர் அழகான வெண்பாக் காணப்படுகிறது. கூடினர் கூடாதார் இவ்விருவர் திறத்தை யும் உவமை கொண்டு அழகாகக் கூறியிருப்பதால் அவ் வெண்பா வையும் சிறிது நோக்குவோம்;

"கூடினர் பானிழலாய்க்
கூடார்பால் வெய்யதாய்க்
காவலன் வெண்குடைபோற்
காட்டிற்றே—கூடிய

மாதவிக்குங் கண்ணகிக்கும்
வானூர் மதிவிரிந்து
போதவிழ்க்கும் கங்குற்
பொழுது."

அரசனது வெண் கொற்றக் குடை கூடினர்க்கு நிழலாயிருக் கும். கூடாருக்கு அந் நிழலின் மையின் வெய்தாயிருக்கும். கூடினர்க்கு நிழலும் கூடா தார்க்கு வெம்மையும் அளித்தல் அதன் தன்மை. அதுபோல வானூர் மதியம், கூடிய மாதவிக்கு இன்பமாயும் கூடாத மாதவிக்குத் துன்ப மாயுமிருந்தது. இது அவ் வெண்பாவின் பொருள்.

வெண்கொற்றக் குடையொடு கூடினர் என்றது நண்பரை. கூடாதார் என்றது பகைவரை. நண்பர்க்கினிமையாயும், பகை வர்க்குக் கடுமையாயும் இருத்தல் அரசர் தன்மை. அத்தன் மையை வெண்கொற்றக் குடை மேலேற்றி நயமாகக் கூறினர்.


PHONE 55034 TEL. ENKAYAM
கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள்
கிசான் டிரேட்மார்க்




பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்

கரப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
53, கிடங்குதெரு சென்னை 1.

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

நினைவு இக் குணநலத்துக்கு ஊற்று.

நந்தி: இது, அமைதியான திறமைக்கு ஏற்றது. இப் பண்பு, செயலாற்றலுக்கு இன்றியமையாதது. அமைதியும் திறமையுமற்ற செயல் வீணுகி விடுதல் கண்கூடு. நந்தி வணக்கம், இந் நலத்தைப் பெருக்கும்.

சிவ குடும்பம் என்பது, இங்ஙனம் குண நலங்களின் வடிவு! சிவம் தந்தை, உமை தாய், பிள்ளையார் முருகர் வீரபத்திரர் புதல்வர்; நந்தி துணைவர்.

சைவம், குணநோக்கமைந்தது. சிவ நலம் பெருகப் பெருக நாடு குணநலம் மிகுந்து போர் வெறி களவுநெறி முதலிய தீமைகள் குறைந்து சிறக்கும். நாடெங்கும் வாழக் கேடொன்றும் இல்லை என்னும் வாழ்க்கை நெறி நிலைக்கும்.

'ஆ. சம்பந்தம்'

---

## முல்லைக் கொடி' நேயர்க்கு

5-10-51- விருந்து 'முல்லைக் கொடி'யின் புதிய ஆண்டு (4-ம் கிளை) தொடங்கி நடந்துவருகிறது

சென்ற ஆண்டுக்குக் கையொப்பம் எந்த மாதம் அனுப்பியிருந்தாலும், சென்ற ஆண்டுடன் அது முடிவெய்தும். இதழ்கள் சேரமல் குறையிருந்தால் அன்பர்கள் அவற்றைத் தெரிவித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆகவே, இந்தப் புதிய ஆண்டுக்குப் புதுக் கையொப்பம் அனுப்பி வைக்க வேண்டும். இதுவரையில் அனுப்பாமலிருக்கும் அன்பர்கள், அன்பு கூர்ந்து, விரைவில் அனுப்பி வைப்பார்களாக!

செய்தியாளர்.

## கார்த்திகை வாழ்த்து

இலக்குமி நிலவிய இன்தமிழ் நாட்டில்
இலக்கண இலக்கிய இயல்பினைப் பேணி
மூவர் தமிழும் முனிமொழி பலவும்
தேவர் குறளும் திறமாய்ப் பயின்று

அன்பும் அறனும் அமைந்தே பிறர்க்கு
என்பும் உரியனாய் இலங்கிய தமிழன்
இன்முக நேசமும் இணையிலா வீரமும்
நன்முகப் பரிவும் நண்ணிய தமிழன்

செயற்கைப் பூசலிற் செறிந்திடு மவர்கள்
இயற்கைப் பொருளில் இயைந்திடும் இறைவனைக்
காணும் அறிவிலாக் கத்திடும் நாத்திகர்
நாணும் நிலையில் நவின்றிலர் பெரியோர்

ஆத்திக உணர்வால் ஆண்டவன் அருளை
ஏத்தியே என்றும் இறைஞ்சித் தொழுது
கற்பின் திறத்தும் காதலர் நலத்தும்
பொற்பின் சுடரிலும் பொங்கிய அன்பிலும்

தளர்நடைச் சேயினும் தங்கிய தவத்திலும்
வளர்நல வாழ்விலும் வளமுடன் கண்டே
அல்லா கிறித்து அரியுடன் அரனும்
எல்லா வேதமும் ஒன்றெனப் போற்றி

யாவும் நலமுற யாவரு மகிழக்
காவும் தடமுங் கவினுறு மலையும்
இல்லம் தோட்டம் இன்னீர் நிலையும்
எல்லாம் ஒளிதரும் எழில்கார்த் திகையெனத்

தேக்கிய செல்வத் திருநாள் சிறப்புற
ஆக்கிய செயலை அன்பாய் மதித்து
நாட்டின் தியாகிகள் நல்லுரை யதனல்
காட்டிய பாதையில் கருத்துடன் சென்றே

மருளது ஒழித்து மன்பகை உயர்ந்திட
அருளது தழைத்து ஆவன செயவே
அன்புக் கனிமொழி அமைச்சு மனையுடன்
இன்பக் குழவியும் இனிது சிறந்திட

கலைமகள் மருவும் கருங்கயல் அன்னை
மலர்மகள் தழுவும் மன்னிய இறைவனை
வாழ்த்தித் தீபம் வளர்க வெனத்தலை
தாழ்த்தி வணங்கித் தமராய் வாழ்வோம்.

தி. நாகப்பன்.

# தொண்டு

'நிலவு'

தொண்டில் ஊக்கமுடைய எனக்குத் தொண்டு என்னும் பொருளை எங்கள் குருகுலத் தலைவர் கட்டளையிட்டவண்ணம் 'மாதர் திருநெறிக்' கழகத்தார் பேசும்படி சொன்னார்கள்; நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

தொண்டுதான் வாழ்க்கையின் குறிக்கோள். மாதர்கள் என்றால் மணம் செய்துகொண்டு வாழ வேண்டும் என்று மட்டுந்தான் பெரும்பாலோர் கருதுகின்றனர். மணமில்லாமல் மணிமேகலை தொண்டு செய்யவில்லையா? மணம் கூடாத திலகவதியார் தொண்டு வாழ்வில் வாழவில்லையா?

சமூகத்தில் மாதர்க்குச் சம உரிமை இருந்தால், வாழ்க்கையிலுள்ள பலரும் முற்கூறியவர்களைப் போலத் தொண்டு செய்ய முடியும். மாதர்கள், செயல் முனைப்பும் நெஞ்சிரக்கமும் உடையவர்கள். சீர் திருத்தத்துக்கு நல்ல நயமொழியும் உறுதியும் வேண்டும். மாதர்களை முன்னிலைப் படுத்திச் செய்தால், எச் சீர்திருத்தமும் இனிது நிறைவேறும். அன்னிபெசண்ட், கஸ்தூரிபா அம்மையின் தொண்டுகள் கருதுதற்குரியன. உரிமை நாட்டில் உணவுப் பஞ்சத்துக்காக ஊனுண்ண வேண்டுமென்று கூறப்படுவதை முதலிற் சீர் திருத்தவேண்டும். இத் தகைய திருநெறிக் கழகங்களின் கடமை இது.

வாழ்வில் தொண்டுக்கு ஒரு தனியிடம் தரவேண்டும். மாதர்கள் பொதுத் தொண்டுக்கு முன் வரவேண்டும்.

எங்கள் குருகுலம் தொண்டுக் களன்; 'வித்தகம் பேச வேண்டாம், பணி செய்ய வாரும்' என்று அது நாட்டவரை அன்புடன் அழைக்கின்றது.

(3-ம் பக்கம் தொடர்ச்சி)

சுருங்கக் கூறின், பருப்பொருளாராய்ச்சியில் ஒன்றிப் பலரும் வியக்கத்தக்க உண்மைகளைப் பெற்ற இன்றைய விஞ்ஞானியின் இதே உள்ளந்தான், நம் பண்டைய சான்றோர்களால், அதன் இயல்பான நெறியில் அகத்தே செலுத்தப்பட்டுப் பகுத்தறிவுக்கு எட்டாத உண்மைகள் பல கண்டு வியந்து களிப்புற்றது. விஞ்ஞானத் துறையில் இன்று அடைந்திருக்கும் வெற்றிக்கு எவ்வளவு அனுபவமும் அறிவும் காலமும் செலவிடப் பட்டனவோ, அங்ஙனமே, அம் மெய்ஞ்ஞான உண்மைகளுக்கும் செலவிடப்பட்டன.

எனவே, நம் பண்டைய ஆன்றோர்களின் கூற்றுக்களை, நம் பகுத்தறிவுக்குப் பொருந்தவில்லை என்ற காரணத்தால் எங்ஙனம் புறக்கணிக்க முடியும்.

இவ்வனுபவத்தின்—மெய்ஞ் ஞானத்தின்—பயனாகத்தான் இன்று நம் கையில் ஒரு திருக்குறளும், திருவாசகமும், தேவாரங்களும் ஒளிர்கின்றன.

இவ் வருமறைகள் எழுவதற்கு முன்னே, வாழ்க்கை, எத்தகைய நாகரிகத்தை எட்டிப்பிடித்திருக்க வேண்டுமென்பதை எண்ணித்தான் தெளிய வேண்டுமே அன்றிச் சொல்லித் தீரா. மெய்யாகவே, வாழ்க்கை, பல கோணங்களினின்றும் ஆராயப் பட்டது, தெளியப்பட்டது; அனுபவப்பட்டது.

இவ்வனுபவங்களின் பிழிவான உண்மை, மேலான உண்மை, அகத்தே கனிந்தெழுந்தது, கோலத்தில் புறத்தே வெளிப்பட்டது.

"வைத்தநிதி பெண்டீர்
மக்கள் குலங் கல்வியென்னும்
பித்தஉலகம் பிறப்போ
டிறப்பென்னுஞ்
சித்தவிகாரக் கலக்கந்தெளிவித்த
வித்தகத்தேவர்க்கே
சென்றூதாய் கோத்தும்பீ"

என்று நம் மணிவாசகப் பெருமான் வியந்து நன்றி செலுத்துவதும் அவ்வனுபவந்தான்.

"முன்றில்வாய் மடற்பெண்ணைக்
குரம்பைவாழ் முயங்குசிறை
அன்றில்காள்! பிரிவுறுநோ
யறியாதீர் மிகவல்லீர்
தென்றலார் புகுந் துலவு
திருத்தோணிபுரத் துறையும்
கொன்றைவார் சடையார்க்கென்
கூர்பசலைகூறீரே"

என்று நம் ஞானசம்பந்தப் பெருமானை, எண்ணி எண்ணி ஏக்கமுறச் செய்ததுவும் அவ்வனுபவமே.

பின்னும்,

"கற்றதனாலாய பயனென்கொல்
வாலறிவ
னற்றாடொழாஅ ரெனின்"

என்று நம் வள்ளுவர் கல்வியின் பயனான அறிவு, பொருள், இவ் வாழ்க்கை, எனைய வற்றாலாய பயனை உலகத்தார்க்குத் தெளிவிக்கச் செய்ததும் அவ் வனுபவமே யாகும்.

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்: தி. சு. பாலசுந்தரம்; குருகுல அச்சகம் மாம்பாக்கம்; மதுராந்தகம். (அஞ்.)